# போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

III-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

**SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE.**

APRIL 4, 1922.

ந. 7.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம்ஸூ ஏப்ரல்மீ 4உ. [விலை, 6 பை.


## இந்திய கவர்ன்மெண்ட் மசோதா ஆக்ட்.

## BILL OF THE GOVERNMENT OF INDIA.

இராஜாங்க சபையிலும் சட்டநிரூபண சங்கத்திலும் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டுகளும், ஷை சபைக்கும் சங்கத்துக்கும அனுப்பப்பட்ட ஸெலெக்ட் கம்மிட்டியாரின் ரிபோர்ட்டுகளும், இந்திய சட்டநிரூபண விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி பிரசுரிக்கப்பட்ட மசோதா ஆக்டுகளும்.

---

இந்தியா கவர்ன்மெண்ட்.

சட்டநிரூபண இலாகா.

அடியிற்கண்ட மசோதா ஆக்டானது - 1922-ம்ஸூ ஜனவரிமீ 31உ சட்ட நிரூபண சங்கத்தில் கொண்டுவரப்பட்டது :—

No. 5 OF 1922.

1922-ம்ஸூத்து 5-ம் ஆ.

### A BILL FURTHER TO AMEND THE LAND ACQUISITION ACT, 1894.

### 1894-ம்ஸூத்து நிலமெடுத்துக்கொள்வதற்கான ஆக்டைப் பின்னும் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்.

1894-ம்ஸூத்து 1-வது ஆக்ட்.

1894-ம்ஸூத்து நிலமெடுத்துக்கொள்வதற்கான ஆக்டைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, 1922-ம்ஸூத்து நிலமெடுத்துக்கொள்வதைக்குறித்த (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

1894-ம்ஸூத்து 1-வது ஆக்ட்.

1894-ம்ஸூத்து 1-வது ஆக்ட் 6-வது பிரிவில் திருத்தம்.

2. (இதில் பின்னால் ஷை ஆக்டென்று குறிப்பிடப்படும்) 1894-ம்ஸூத்து நிலமெடுத்துக்கொளவதற்கான ஆக்ட் 6-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில், "ஷை நிர்ணயப் பத்திரிகையானது" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1894-ம் ௵த்து 1-வது ஆக்ட் 7-வது பிரிவில் திருத்தம்.

3. ௸ ஆக்ட் 7-வது பிரிவுடன் அடியிற்கண்ட விலக்கு நிபந்தனையைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

"ஆனால், எடுத்துக்கொள்ளப்போகும் நிலத்தைத் தெரிந்தெடுப்பதற்கு உத்தரவாதியாயிருக்கிற அல்லது 4-வது விதியின்படி பிரதம விசாரணை செய்திருக்கிற யாதொரு உத்தியோகஸ்தர் இந்தப் பிரிவின்படி கலெக்டராக நியமிக்கப்படக்கூடாது."

1894-ம் ௵த்து 1-வது ஆக்ட் 9-வது பிரிவில் திருத்தம்.

4. ௸ ஆக்ட் 9-வது பிரிவிலே,—

(a) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் "அந்த நிலத்திலுள்ள சகல சுதந்தரங்களுக்காகவும் பிரதிபலன் தொகை தாவா செய்கிறவர்கள்" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "அந்தப்படி நிலம் எடுத்துக்கொள்வதற்கு ஆட்சேபனை ஏதாகிலும் இருந்தால் அதையும் அந்த நிலத்திலுள்ள சகல சுதந்தரங்களுக்காகவும் பிரதிபலன் கொடுக்கவேண்டுமென்று செய்துகொள்ளும் தாவாக்களையும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள வேண்டும் ;

(b) (2) குறிப்பிட்ட உட்பிரிவில் "அந்த நிலத்தில் அவரவர்களுக்குரிய சுதந்தரம் இப்படிப்பட்டதென்றும்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "அதை எடுத்துக்கொள்வதற்கு அவர்களுக்கு ஆட்சேபனை ஏதாகிலும் இருந்தால் அதற்குள்ள காரணங்கள் இன்னவையென்றும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும் ; மேலும், அதே உட்பிரிவில் "அந்த சுதந்தரத்திற்காக" என்னும் வார்த்தைகளுககு பர்த்தியாக "அந்த நில விஷயமாய் அவர்கள் கொண்டாடும் சுதந்தரத்திற்காக" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்.

1894-ம் ௵த்து 1-வது ஆக்ட் 11-வது பிரிவுக்கு பர்த்தியாக புதிய பிரிவை அமைத்துக்கொள்வது.

5. ௸ ஆக்ட் 11-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

கலெக்டர் விசாரணை செய்வதும் தீர்மானிப்பதும்.

"11. (1) மேற்கண்டபடி குறிக்கப்பட்ட தினத்திலாவது, விசாரணை ஒத்திவைக்கப்பட்ட வேறே யாதொரு தினத்திலாவது, கலெக்டரானவர் - யாதொரு சுதந்தரமுடையவர் 9-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட நோட்டிஸை அனுசரித்து, உத்தேசித்தபடி நிலம் எடுத்துக்கொள்ளப்படுவது விஷயமாய்ச் சொல்லியிருக்கும் ஏதேனும் ஆட்சேபனையைக்குறித்து முதலில் விசாரணை செய்யத் தொடங்கி, அந்த ஆட்சேபனையை ஒப்புக்கொண்டாவது தள்ளிவிட்டாவது உத்தரவு பிறப்பிக்கவேண்டும். நிலம் எந்தக் காரியத்துக்காக வேண்டியிருக்கிறதோ அந்தக் காரியமானது பிரஸ்தாப ஆக்டின் தாத்பரியப்படி அசேஷ ஜனங்களுடைய உபயோகத்துக்குச் சம்பந்தப்பட்ட காரியம் அல்லவென்னும் முகாந்தரத்தைக்கொண்டாவது, உத்தேசித்தபடி (நிலம்) எடுத்துக்கொள்ளப்படுவது விரோத எண்ணத்துடனுகிலும் அலைக்கழிக்கும் நோக்கத்துடனுகிலும் செய்யப்படுகிறதென்னும் முகாந்தரத்தைக்கொண்டாவது மாத்திரமே நிலமெடுத்துக்கொள்வதைக் குறித்து ஆட்சேபனை செய்யவேண்டும் ;

ஆனால். இருப்புப்பாதைகள், நீர்ப்பாய்ச்சல் வாய்க்கால்கள் அல்லது ரஸ்தாக்களைப் போன்ற பெரிய ஏற்பாடுகளின் விஷயத்தில், உத்தேசித்தபடி நிலமெடுத்துக் கொள்ளப்படுவது கிரமமல்லவென்று ருஜுச்செய்யப்படுகிறவரையில், அந்தப்படி எடுத்துக்கொள்ளப்படுவது கிரமமாயிருப்பதாகவே கருதப்படும்.

(2) நிலமெடுத்துக்கொள்வதற்காக விண்ணப்பம் செய்துகொள்ளும் உத்தியோகஸ்தராவது அதற்கு ஆட்சேபிக்கும் நபராவது தங்கள் விஷயமாய்க் கலெக்டர் செய்யும் உத்தரவைப்பற்றி அதிருப்தியடையும் பட்சத்தில், அவர் - கலெக்டரின் உத்தரவு தமக்குத் தெரிவிக்கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்துக்குள் எழுத்துமூலமாய்க் கலெக்டருக்கு விண்ணப்பம் செய்துகொண்டு, பிரஸ்தாப விஷயத்தைக் கலெக்டர் கோர்ட்டாரால் தீர்மானிக்கப்படுவதற்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்ளலாம். 18 முதல் 22 வரையிலுள்ள பிரிவுகளில் கண்டிருக்கும் நிபந்தனைகள், இந்தப் பகுதியின்படி கோர்ட்டரால் நடத்தப்படும் விசாரணைகளுக்குக் கூடுமானமட்டில் பிரயோகப்படும். கோர்ட்டாரின் தீர்மானம் முடிவானதாகும்.

(3) உத்தேசித்தபடி நிலம் எடுத்துக்கொள்ளப்படுவதற்குச் செய்திருக்கும் ஆட்சேபனையைக் கோர்ட்டார் ஆதரித்தால், பிரஸ்தாப விஷய சம்பந்தமாய்ப் பின்னும் நடவடிக்கை எதுவும் நடத்தக்கூடாது. நிலம் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு ஆட்சேபனை எதுவும் கிரமமாய்ச் செய்யப்படாதிருந்தாலும், ஆட்சேபனை செய்யப்பட்டிருந்து அது ஒரு தகுந்த அதிகாரியால் முடிவாய்த் தள்ளிவிடப்பட்டிருந்தாலும், கலெக்டரானவர் - 8-வது பிரிவின்படி எடுக்கப்பட்ட அளவுகளுக்கு யாதொரு நபர் 9-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட நோட்டிஸை அனுசரித்து ஆட்சேபனைகள் எவையேனும் சொல்லியிருந்தால்

அவைகளைக் குறித்தும், அந்த நிலத்தின் கிரயத்தைக் குறித்தும் பிரதிபலன் தொகைக்காக தாவாசெய்யும் நபர்களில் அவரவர்களுக்குள்ள சுதந்தரங்களைக்குறித்தும் விசாரணை செய்யத் தொடங்கி,—

(i) அந்த நிலத்தின் சரியான விஸ்தீர்ணம் இன்னதென்றும்,

(ii) அந்த நிலத்துக்காகக் கொடுக்கவேண்டியதென்று தமக்குத் தோற்றுகிற பிரதிபலன் தொகை இவ்வளவென்றும்,

(iii) அந்த நிலத்திற்குச் சுதந்தர முடையவர்களென்று தெரிந்துகொள்ளப்பட்டாவது நம்பப்பட்டாவதிருக்கிற சகல நபர்களைக் குறித்தாகிலும் அவர்களுடைய தாவாக்களைக் குறித்தாகிலும் தமக்குச் சங்கதி தெரிந்திருக்குமாகில் அவர்கள் முறையே தமக்கு முன்பாகவந்து ஹாஜராயிருந்தாலுஞ்சரி ஹாஜராயிராவிட்டாலுஞ்சரி அவர்கள் எல்லாருக்கும் ஷை பிரதிபலன் தொகை இன்னபடி பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டுமென்றும்

தீர்மானித்து அதற்குத் தம் கையெழுத்து போடவேண்டும்.

(4) இந்தப் பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்டது முதல் (3) குறிப்பிட்டது வரையிலுள்ள பகுதிகளில் கண்டதெதனுலும் 17-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்கு பாதகம் உண்டாகமாட்டாது."

1894-ம் ௵த்து 1-வது ஆக்ட் 35-வது பிரிவில் திருத்தம்.

6. ஷை ஆக்ட் 35-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில், "மாறுபடுகிற விஷயத்தில்" என்னும் வார்த்தைகளுக்கு பார்தியாக "மாறுபடுகிற விஷயத்திலாகிலும் யாதொரு சுதந்தரமுடையவர் (நிலம்) எடுத்துக்கொள்ளப்படுவதற்கு ஆட்சேபனை செய்யும் விஷயத்திலாகிலும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்.

1894-ம் ௵த்து 1-வது ஆக்ட் 36-வது பிரிவில் திருத்தம்.

7. ஷை. ஆக்ட் 36-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவுடன் அடியிற்கண்ட விலக்கு நிபந்தனையைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்; அதாவது :—

"ஆனல், உத்தேசித்தபடி (நிலம்) எடுத்துக்கொள்ளப்படுவதே கிரமமானதா இல்லையா என்பது விஷயமாய் விவாதம் ஏற்பட்டிருக்கக்கூடாது."

1894-ம் ௵த்து 1-வது ஆக்ட் 47-வது பிரிவில் திருத்தம்.

8. ஷை ஆக்ட் 47-வது பிரிவில் அடியிற்கண்ட வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்; அவையாவன :—

"அவர் மாஜிஸ்ட்ரேட்டாயிருந்தால் அந்த நிலத்தைத் தமக்கு விட்டுவிடச்சொல்லி நிர்ப்பந்திக்கவேண்டும்; அவர் மாஜிஸ்ட்ரேட்டாயிராவிட்டால்".

---

## இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

இப்போதிருக்கிறபடி, 1894-ம் ௵த்து நிலமெடுத்துக் கொள்வதற்கான ஆக்டில், சட்டத்துக்கு விரோதமாகவாவது அலைக்கழிக்கும் நோக்கத்துடனுவது நிலமெடுத்துக் கொள்வதைத் தடுப்பதற்கு நிபந்தனைகள் எவையும் ஏற்பட்டில்லை. இது வாஸ்தவமான குறையென்றே மதிக்கப்படுகிறது. இதை நிவர்த்திப்பதே இந்த மசோதா ஆக்டின் நோக்கமாகும். சில நிபந்தனைகளை இந்த மசோதா ஆக்டில் சகாயகரமான நிபந்தனைகளாகச் சேர்த்திருககிறது; அவை என்னவென்றல், எடுத்துக்கொள்ளப்போகும் நிலத்தைத் தெரிந்தெடுப்பதற்காவது ஆக்டின் 4-வது பிரிவின்படி பிரதம விசாரணை செய்வதற்காவது உத்தரவாதியாயிருக்கும் உத்தியோகஸ்தர் கலெக்டராய் நியமிக்கப்படக் கூடாதென்பதும், கலெக்டர் தம்முடைய சொந்த உத்தரவுகளை அமுலுக்குக் கொண்டுவரக் கூடாதென்பதுமே. நிலம் எடுத்துக்கொள்ளும் உத்தியோகஸ்தர் ஒருவாறு நியாயவிசாரணை சம்பந்தமாயுள்ள தம்முடைய அலுவல்களை பக்ஷபாதமின்றி செய்யத் தொடங்குவது உசிதமாகும்.

ஜெ. ராமய்யா.

1921-ம் ௵ ஜுலை ௴ 21 ௳.

---

எச். மான்க்ரீப் ஸ்மித்,
இந்தியா கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
*Tamil Translator to Government.*

# இந்தியா கவர்ன்மென்ட் ஆக்டுகள்

# ACTS OF THE GOVERNMENT OF INDIA.

இந்திய சட்ட நிருபண சபையாரால் செய்யப்பட்டு கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆக்டுகள்.

---

இந்திய சட்ட நிருபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது 1922-ம் வருஷம் பெப்ரவரி மீ 22உ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகிறது :—

## ACT No. IV OF 1922.

## 1922-ம் வருஷத்து 4-வது ஆக்ட்.

---

## AN ACT TO REPEAL CERTAIN SPECIAL ENACTMENTS SUPPLEMENTING THE ORDINARY CRIMINAL LAW.

## சாதாரண குற்ற விசாரணைச் சட்டத்துக்கு உடன்சேர்க்கையாயிருக்கும் சில விசேஷ சட்டதிட்டங்களை ரத்துசெய்வதற்கான ஆக்ட்.

---

சாதாரண குற்ற விசாரணைச் சட்டத்துக்கு உடன்சேர்க்கையாயிருக்கும் சில விசேஷ சட்டதிட்டங்களை ரத்துசெய்வது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, விசேஷ சட்டங்களை ரத்துசெய்வதற்கான 1922-ம் வருஷத்து ஆக்ட் என்று சொல்லலாம்.

வியாபகம்.

2. இந்த ஆக்டின்படி யாதொரு சட்டதிட்டத்தை ரத்துசெய்வதானது - ப்ரிடிஷ் பலுசிஸ்தானம், ஸந்தால் பர்க்கானாக்கள், ஷான் ஸ்டேட்டுகள், ஆரக்கான் ஹில் டிஸ்ட்ரிக்ட் ஆகிய இவைகள் உட்பட, இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கின தேதியில் ஷை சட்டதிட்டம் அமுலிலிருந்த ப்ரிடிஷ் இந்தியாவின் ஒவ்வொரு பாகத்திலும் செலாவணியாகவேண்டும் ; மேலும், அப்படிப்பட்ட யாதொரு சட்டதிட்டம் மேலேகண்ட யாதொரு பாகத்தில் செலாவணியாய்க்கொண்டிருப்பதாகவாவது அந்த பாகத்துக்கு பிரயோகப்படுவதாகவாவது பிரசித்தஞ்செய்து அல்லது அந்த பாகத்துக்கு அது வியாபிக்கும்படிச்செய்து அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட எந்த விளம்பரமும் - ஷை சட்டதிட்டத்துக்கு அது சம்பந்தப்படுகிறமட்டிலே ஷை தேதியிலும் அந்தத் தேதியிலிருந்தும் ரத்துசெய்யப்பட்டிருப்பதாக எண்ணப்படும்.

ரத்துகள்.

3. ஷெட்யூலில் சொல்லியிருக்கும் சட்டதிட்டங்கள் - அதன் நாலாவது கலத்தில் குறிப்பிட்டிருக்கும் அளவுக்கு இதனால் ரத்துசெய்யப்படுகின்றன.

## ஷெட்யூல்.

### ரத்துசெய்யப்பட்ட சட்டதிட்டங்கள்.

(3-வது பிரிவைப் பார்க்கவும்.)

| வருஷம். | நம்பர். | சுருக்கமான பெயர். | இவ்வளவுமட்டில் ரத்து. |
|---|---|---|---|
| | | **சென்னபட்டணத்து ரெகுலேஷன்களும் வங்காளத்து ரெகுலேஷன்களும்** | |
| * | * | * * * | * * |
| 1808 | 7 | இராஜாங்கத்தாருக்கு விரோதமாய்ச் செய்யப்பட்ட குற்றங்களைக் குறித்த 1808-ம்௵த்திய சென்னபட்டணத்து ரெகுலேஷன். | எவ்வளவு ரத்தாகாமலிருக்கிறதோ அவ்வளவு. |
| | | **ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்ஜெனரலவர்களால் செய்யப்பட்ட ஆக்ட்டுகள்** | |
| 1857 | 11 | துரைத்தனத்தாருக்குப் பொல்லாங்கு செய்வதைக்குறித்த 1857-ம்௵த்து ஆக்ட். | எவ்வளவு ரத்தாகாமலிருக்கிறதோ அவ்வளவு. |
| ,, | 25 | பறிமுதல் செய்வதைக்குறித்த 1857-ம்௵த்து ஆக்ட். | எவ்வளவு ரத்தாகாமலிருக்கிறதோ அவ்வளவு. |
| * | * | * * * | * * |
| 1874 | 15 | சட்டதிட்டங்களின் பிரதேச வியாபகத்தைக்குறித்த 1874-ம்௵த்திய ஆக்ட். | முதலாவது, இரண்டாவது, நான்காவது, ஐந்தாவது ஷெட்யூல்களில் எவ்வளவு இராஜாங்கத்தாருக்கு விரோதமாய்ச் செய்யப்பட்ட குற்றங்களைக்குறித்த 1804-ம்௵த்திய வங்காளத்து ரெகுலேஷனுக்கும் இராஜாங்கத்தாருக்கு விரோதமாய்ச் செய்யப்பட்ட குற்றங்களைக் குறித்த 1808-ம்௵த்திய சென்னபட்டணத்து ரெகுலேஷனுக்கும் துரைத்தனத்தாருக்குப் பொல்லாங்கு செய்வதைக்குறித்த 1857-ம்௵த்து ஆக்டுக்கும், பறிமுதல் செய்வதைக்குறித்த 1857-ம்௵த்து ஆக்டுக்கும் சம்பந்தப்படுகிறதோ அவ்வளவு. |
| * | * | * * * | * * |
| 1891 | 12 | 1891-ம்௵த்து திருத்துவதற்கான ஆக்ட் .. | இரண்டாவது ஷெட்யூலில் எவ்வளவு பறிமுதல் செய்வதைக்குறித்த 1857-ம்௵த்து ஆக்டுக்குச் சம்பந்தப்படுகிறதோ அவ்வளவு. |
| 1894 | 13 | 1894-ம்௵த்து திருத்துவதற்கான (ராணுவ) ஆக்ட். | இரண்டாவது ஷெட்யூலில் எவ்வள்வு இராஜாங்கத்தாருக்கு விரோதமாய்ச் செய்யப்பட்டகுற்றங்களைக் குறித்த 1808-ம்௵த்திய சென்னபட்டணத்து ரெகுலேஷனுக்குச் சம்பந்தப்படுகிறதோ அவ்வளவு. |
| * | * | * * * | * * |
| 1897 | 14 | 1897-ம்௵த்திய இந்துதேசத்துச் சுருக்கமான பெயர்களைக்குறித்த ஆக்ட். | ஷெட்யூலில் எவ்வளவு துரைத்தனத்தாருக்குப் பொல்லாங்கு செய்வதைக்குறித்த 1857-ம்௵த்து ஆக்டுக்கும் பறிமுதல் செய்வதைக்குறித்த 1857-ம்௵த்து ஆக்டுக்கும் சம்பந்தப்படுகிறதோ அவ்வளவு. |
| * | * | * * * | * * |
| 1915 | 4 | இந்தியாவின் பாதுகாப்பைக்குறித்த (குற்றவிசாரணைச் சட்டத்தைத் திருத்துவதற்கான) 1915-ம்௵த்து ஆக்ட். | முழுவதும். |
| 1916 | 2 | இந்தியாவின் பாதுகாப்டைக்குறித்த 1916-ம்௵த்து (திருத்துவதற்கான) ஆக்ட். | முழுவதும் |
| 1919 | 11 | அராஜகத்துக்கும் இராஜாங்கப்புரட்சிக்கும் சம்பந்தப்பட்ட குற்றங்களைக்குறித்த 1919-ம்௵த்து ஆக்ட். | முழுவதும். |
| | | **ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் செய்யப்பட்ட ரெகுலேஷன்கள்.** | |
| * | * | * * * | * * |

எச். மான்க்ரீப் ஸ்மித்,
இந்தியா கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
*Tamil Translator to Government.*

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது—1922-ம்௵ பெப்ரவரி௴ 22உ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ் செய்யப்படுகிறது :—

# ACT No. V OF 1922.

## 1922-ம்௵த்து 5-வது ஆக்ட்.

## AN ACT TO REPEAL CERTAIN PROVISIONS OF THE INDIAN CRIMINAL LAW AMENDMENT ACT, 1908.

## 1908-ம்௵த்திய இந்துதேசத்துக் குற்றவிசாரணைச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஆக்டிற்கண்ட சில நிபந்தனைகளை ரத்துசெய்வதற்கான ஆக்ட்.

1908-ம்௵த்திய இந்து தேசத்துக் குற்றவிசாரணைச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஆக்டிற்கண்ட சில நிபந்தனைகளை ரத்துசெய்வது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

1908-ம்௵த்து 14-வது ஆக்ட்.

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, இந்துதேசத்துக் குற்றவிசாரணைச் சட்டத் திருத்தத்தை ரத்துசெய்வதற்கான 1922-ம்௵த்து ஆக்ட் என்று சொல்லலாம்.

வியாபகம்.

2. இந்த ஆக்டின்படி யாதொரு சட்டதிட்டத்தை ரத்துசெய்வதானது - ஸந்தால் பர்க்கனுக்கள் உள்பட, இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கின தேதியில் ஷை சட்டதிட்டம் அமுலிலிருந்த ப்ரிடிஷ் இந்தியாவின் ஒவ்வொரு பாகத்திலும் செலாவணியாகவேண்டும் ; மேலும், அப்படிப்பட்ட யாதொரு சட்டதிட்டம் அப்படிப்பட்ட யாதொரு பாகத்தில் செலாவணியாய்க் கொண்டிருப்பதாக்வாவது அந்த பாகத்துக்குப் பிரயோகப்படுவதாகவாவது பிரசித்தஞ்செய்து அல்லது அந்த பாகத்துக்கு வியாபிக்கும்படிச்செய்து அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கும் யாதொரு சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட எந்த விளம்பரமும் - ஷை சட்டதிட்டத்துக்கு அது சம்பந்தப்படுகிறமட்டில் ஷை தேதியிலும் அந்தத் தேதியிலிருந்தும் ரத்து செய்யப்பட்டிருப்பதாக எண்ணப்படும்.

ரத்துகள்.

3. 1908-ம்௵த்திய இந்துதேசத்துக் குற்றவிசாரணைச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஆக்டின் 1-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவும், அதன் 1-ம பாகமுழுவதும், அதனுடன் சேர்த்திருக்கும் ஷெட்யூலும, (அதிகாரங்களை) ஒப்புவிப்பதைக்குறித்த 1920-ம்௵த்து ஆக்டுடன் சேர்த்திருக்கும் முதல் ஷெட்யூலில் எவ்வளவு 1908-ம்௵த்திய இந்துதேசத்துக் குற்றவிசாரணைச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஆக்ட் 1-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவுக்கும் 2-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவுக்கும் சம்பந்தப்படுகிறதோ அவ்வளவும் இதனால் ரத்து செய்யப்படுகின்றன.

1908-ம்௵த்து 14-வது ஆக்ட்.

1920-ம்௵த்து 38-வது ஆக்ட்.

1908-ம்௵த்து 14-வது ஆக்ட்.

எச். மான்க்ரீப் ஸ்மித்,
இந்தியா கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி.

(A true translation.)

C. N. SARAVANA MUDALIYAR,
*Tam.l Translator to Government.*

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.